# மெட்ரோ ரயில் சேவை நேரம் இரவு 11 மணி வரை நீட்டிப்பு



சென்னை, ஆக.22: சென்னை மெட்ரோ ரயில் சேவை நேரம் திங்கள்கிழமை (ஆக.23) முதல் நீட்டிக்கப்படவுள்ளது. அதாவது, காலை 5.30 மணி முதல் இரவு 11 மணி வரை மெட்ரோ ரயில்கள் இயக்கப்படவுள்ளன.

இது குறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவன செய்திக்குறிப்பு:

சென்னை மெட்ரோ ரயில் பயணிகளின் வேண்டுகோளுக்கு இணங்கவும், வசதிக்காகவும் திங்கள்கிழமை (ஆக.23) முதல் வார நாள்களில் மெட்ரோ ரயில் சேவை காலை 5.30 மணி முதல் இரவு 11 மணி வரை நீட்டித்து இயக்கப்படவுள்ளது.

மெட்ரோ ரயில் சேவைகள் நெரிசல் மிகுந்த காலை 8 மணி முதல் முற்பகல் 11 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் 5 நிமிஷ இடைவெளியில் இயக்கப்படும். மற்ற நேரங்களில் 10 நிமிஷ இடைவெளியில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும்.

மெட்ரோ ரயில் சேவ்வகள் அனைத்து ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரசு பொது விடுமுறை நாள்களில் காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரை 10 நிமிஷ இடைவெளியில் இயக்கப்படும்.

கரோனா நோய்த்தொற்று பரவாமல் தடுப்பதற்காக, மெட்ரோ ரயில் நிலைய வளாகம், மெட்ரோ ரயில்களின் உள்ளே முன்னெச்சரிக்கை நடவடிக்கைதீவிரமாக கடைப்பிடிக்கப்படுகிறது. பயணிகள் கட்டாயம் முகக்கவசம் அணிந்து வரவேண்டும், சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்கவும், கிருமிநாசினி மூலமாக கைகளைச் சுத்தமாக வைத்திருக்கவும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

மெட்ரோ ரயில் நிலையங்கள், மெட்ரோ ரயில்களில் நுழைவதற்கு அனைத்து பயணிகளும் கட்டாயம் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும். முகக்கவசம் அணியாத பயணிகளுக்கு உடனடி அபராதமாக ரூ.200 வசூலிக்கப்படுகிறது.

ஜூன் 21-ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 21 ஆம் தேதி வரை, முகக்கவசம் அணியாத 176 பயணிகளிடமிருந்து அபராதமாக ரூ.35,200 வசூலிக்கப்பட்டுள்ளது.